# THE MORNING STAR.

Vol. 61. Jaffna, Thursday 10th of Jan. 1901. No. 1.

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE.

## OUR SUBSCRIBERS.

### Please remit your Subscriptions for Star at once.

*RECEIPTS FOR THE MORNING STAR.*
1900

| | | |
|---|---|---|
| Trincomalee | Rev. D. P. Niles 99 and 1900 | 4.00 |
| Nellore | Mr. C. W. Catheraveluppillai C. C. S. | 2.00 |
| Jaffna Town | Messrs. K. Muttutamby, 1.50 S. Visuvalingam 1.50, R. Bryant 1.25, J. K. Sanmugam B.A. 2 50, | 6.75 |
| Kalmunai | Mr. S. Ponniah | 1.00 |
| Kandy | " J. Philips 1900 | 2.00 |
| Batticaloa | Rev. J. Benjamin | 2.00 |
| Chavagacherri | Rev. T. P. Hunt, and Messrs. S. Samuel A. K. Valuppillai and J. V. Murugasu for 1900 | 5.00 |
| Mantotta | Dr. S. H. Gnanamuttu 1900 | 2.00 |
| Manippay | Revds. T. B. Scott M.D. 1.25, W. P. S. Nathaniel 1.00, and Mr V. Vyramuttu 2.50 | 4 75 |
| Uduvil | Mr. Tennent | 2 50 |
| Navaly | " David | 1.25 |
| Varany | " Seevaratnam | 5.00 |
| Velankulam | " A. Rajakarier | 3.00 |
| Vannarponnai | Messrs. T. C. Changarapillai J. P. S. Kandiah, Rev. S. Solomon | 4.50 |

THE CEYLON STEAMSHIP Co. Ltd.



The Lady Gordon and Aska are appointed to sail from Mandative for Colombo on the undermentioned dates:—

Via Paumban.

Lady Gordon, sails on 19th Jan. 1901
" " 30th Jan. 1901

Via Point Pedro.

S. S. Aska sails on 18th Jan. 1901
" 1st Feb "

W. MATHER & SON, Agents

NOTICE.

Go to Alexander Bros & Co

FOR

Fresh Oilmanstores, Patent Medicines and Sundries, if you want genuine articles at moderate prices.

Prescriptions compounded from Pure Drugs, Patients visited by

DR. DAVID ABRAHAM

ALEXANDER BROS, & Co.
General Merchants & Dispensing Chemists,
JAFFNA.

THE JAFFNA COMMERCIAL CORPORATION LIMITED.

On and after this date money will be lent by this Corporation on good jewellery being tendered as security.
Jaffna 1st December 1900

JAFFNA COMMERCIAL CORPORATION Lt.

From the 1st January 1901, remittances can be made both by Wire and Draft between Batticaloa and Jaffna.

USEFUL BOOKS.

General Letter Writer (Fourth Edition)—Containing 555 letters. Useful to every man in every rank and position of life for daily use. Re. 1, post 1 anna.

Helps to the Study of English (Third Edition)—Contents: Phrases, Idioms, Proverbs, &c, with their explanations and proper uses Re. 1 postage 1 anna.

Every-Day doubts and Difficulties (in reading speaking and writing the English Language.) Re. 1. post 1 anna.

A Hand-book of English Synonyms,—Explained with illustrative sentences. Aids to the right use of *synonymous* words in composition. 9 annas, postage 1 anna.

A Companion to English Grammar and Composition:—Very useful to the Entrance candidates 8 annas, postage 1 anna.

Select Speeches of the Great Orators:—Vols. I & II. These books help to write idiomatic English, improve the oratorical and argumentative powers, &c. Each Volume Rs. 2, postage 1½ anna.

Solutions of 642 very important Examples in Arithmetic, Algebra and Geometry. For Entrance and Preparatory Classes. Rs. 1-8, postage 1 anna.

Solutions of over 300 typical Examples in Trigonometry. For F. A. students. Re. 1, postage 1 anna.

By V. P. Post 2 annas extra. To be had of (Messrs. Bose, Banerji & Co., 40, Sukea's Street, Harri Road), son Calcutta.

## NOTICE.

To all those whom it may Concern:

Notice is hereby given that I have this day concelled the Power of Attorney given by me to my uncle Venasitamby Kandapillai of Neeraviady Vannarponne West now residing at Batticotta west and therefore no receipt discharges or acquittances signed by him for me and in my behalf will be accepted by me as valid.

KualaLumpor
15th Dec. 1900

Signed S. Visuvanathan
Head Overseer

## Local & General.

**The Weather.** It has been clear and beautiful for over a fortnight, and a few showers would not come amiss just now. The rainfall for the past year has been not far from the average and the prospect of a bumper crop is well nigh assured. The health of the peninsula is not so good. Fever has broken out in Jaffna town and in other places which is carrying off its victims though the mortality is not very great so far. [illegible] are heavy, but not up to the usual record. The [illegible] has seen some hot weather for January.

**The Morning Star.** The first issue of the *Star* for 1901 was postponed a week on account of the holidays. We should be glad to make our paper weekly instead of once in two weeks, but hesitate lest it be not well supported. We should be glad to hear from our friends and subscribers as to their wish in the matter. The *Star* is next to the oldest newspaper in the island we believe, and we hope it has still a future before it. We should be glad to get items of news from different localities, and hope our friends will come to the rescue.

To our readers we would make the request that arrears in subscriptions be paid up without delay.

**The Meeting Hall.** The second Annual Report of the Meeting Hall Mission has reached us, and we note that the year 1900 has been one of growth. Its aim is set forth in the following words:

"The Meeting Hall Mission is the people's Mission to the people. It seeks to unite people for the uplifting of mankind, and any form of enterprise tending to the welfare of the people and the promotion of happiness, and prosperity, cannot be regarded illegitimate to the proper domain of our work." A new feature is the starting of a school for preparing boys for the higher examinations. Five teachers have been more or less associated with the teaching staff and the pupils number 30. The Dispensary has been moved from 101 Dam. St. to the lower floor of the Meeting Hall. The finances show that Rs. 924.05 were received and that all but Rs. 15 20 has been expended. By far the greater part of this goes to pay the rent and to defray other expenses in connection with the upkeep of the Hall.

We wish this little independent work success in the year upon which we have entered.

**Central College Magazine.** The second number has put in an appearance and is in no way behind the first. We note an interesting article on "How to write an Essay" by Mr. Leak our former Asst. Govt. Agent, and an address by Advocate Isaac Tambyah on "Young Jaffna."

**Ecclesiastical Association.** The annual meeting of the missionaries, pastors and delegates of the American mission churches was held at Tillipally on Thursday the 4th inst. There was a full representation and the meeting lasted till late. Great interest was evinced in a paper read by one of the pastors on "The pastoral office" and a committee appointed to discuss the points raised in the paper and suggest any necessary action. The number received on profession of faith in the churches was 80,—less than for the previous year. The contributions for all objects including Indian Famine Relief and the missionary societies were considerably in excess of the amount for the previous year.

**The Crossbearer** is the title of a little volume prepared by J. N. Farquhar, M.A. of the London Missionary Society's College, Calcutta. It seems to be a valuable introduction to the life and teaching of Jesus adapted to meet the needs of those who have had no previous acquaintance with the Bible. It consists of the Gospel of St. Matthew with some parts most difficult for beginners omitted, analysed for the help of the student, and a commentary which is so clear that the meaning is made very plain to all. It would be a good book to use in schools. A brief Sketch of the History of Israel is added which is a most excellent summary and would be of great help to those who have studied Old Testament History in fixing in mind the most important events. A map of Palestine and an index add to the value of the book.

**Visitors.** Messrs Edward and A. E. Walker of Messrs Walker Sons and Co. Colombo and Mr. A. Fowler arrived at Jaffna by Lady Havelock on the 5th inst. They spent both Saturday and Sunday in Jaffna and attended divine service on Sunday evening at the Wesleyan Chapel. Mr. Wm. Mather their agent at Jaffna received them and provided them all accommodation. They went to Point Pedro on Monday by land and resumed their trip round the Island from Pt. Pedro.

The Dewan of Mysore with his brahman attendants arrived at Jaffna on the 24th ultimo by steamer from Colombo. He stayed a couple of days at the Queen's House in the Fort, and then spent the rest of his stay at [illegible]cerimalai. A reception was given to him on the 2nd inst. at the "Hindu College." On the 3rd inst. he left Jaffna calling at Paumben and Ramaswaram on his way back to Mysore.

Mr. De Soysa the eldest son of the late Mr. De Soysa one of the wealthiest men in Ceylon visited Jaffna arriving here on the 24th ult. by steamer. He proceeded to Batticaloa from Jaffna and returned to Colombo via Jaffna on the 2nd inst. by steamer.

**The Boers.** The Ex-president Mr. Kruger who is now in Europe is ill in bed with bronchitis. The South African affairs are still unsettled, the Boers giving to the British obstinate resistance. The fighting continues causing occasionally severe causalities. Judging from their attitude, it appears that they are still hopeful of the Republic. Two of the Boer prisoners who were in Ceylon succeeded in effecting an escape to Rangoon. They were arrested at Rangoon and will be taken back to Ceylon. Two Boer officers arrived in Jaffna on the 24th ultimo. and they are given accommodation at the Queen's House in the Fort. They will remain in Jaffna for some time. The rumour of accommodating several Boer prisoners in Jaffna appears to have been confirmod. The District Judge, Mr. Rudd, and other occupants of the houses in the Fort have been requested, it is said, to find quarters else where. The Fort is to be exclusively used for the Boer prisoners and the guard. This arrangement shall have to be made after proper quarters are provided for the prisoners now in the fort. It is reported that they are to be sent to Colombo or shut up in the Kaits sea Fort *Com.*

**A Pick Pocket in the Court House.** A man of Koddadi in Vannarponne was caught on the 7th inst, in the act of stealing a small bag with its contents. His name is Murugan of the fisher caste. He was at once arrested and produced before the Magistrate who was then sitting in Court and after trial he was sent to jail for one month. Since the detection of this petty theft, people say that many thefts of similar nature were committed on former occasions, but they were not detected. Exemplary punishment on such wicked fellows will improve the character of the large number of vagrants about the Courts. *Com.*

**Wesleyan Mission.** The Synod of the Northern circuit will be held this year at Jaffna commencing next week. The Jaffna mission has purchased for Rs. 8,000, sixteen lachams V. C. of the ground attached to "Burleigh House," and it is rumored that the Central College building will be erected on this spot. *Com.*

**On the Sick List.** S. Bastiampillai Modr. the chief Katchcheri Mudaliar is said to be seriously ill and has gone to Point Pedro for the benefit of his health *Com.*

**Auction Sale.** An extent of 90¼ Lm. P. C belonging to the Jaffna F. N. S. Hospital was sold on the 5th inst. by Mr Mather as auctioneer. The said piece of land lies to the north of the "Victoria road" and sold in six pieces. The whole extent fetched £ 1000 less a few rupees. The present owners, it is believed, can afford to put up good bungalows making the place worthy of the road with its new name. *Com.*

**Crime.** There have been several cases of hurt and riot during the Christmas season, and the Magistrate had to deal with several cases of assault and disorderly conduct. There was a serious case of assault on the Beach road near the Arrack store between the Police and boutique keepers. And there was a riot between the two sections of the people who dispute the right of management of a Temple called "Kayelaya Pillayar" at Nellore. *Com.*

**Week of Prayer.** The services of the Week of Prayer are being held in all our churches, and so far as we can learn, are being well attended. The subjects are a little differently stated this year and are all the more interesting.

**A Floating hospital.** The S. S. Atlantian (of 9,354 gross tonnage) which was engaged in transport work between England and South Africa during the earlier portion of the war, arrived in Colombo yesterday (the 6th inst.) and is to be stationed here as a floating hospital for the Boer prisoners interned in Ceylon. The vessel has been taken over by the Imperial authorities and is to serve as a hospital for the Boer prisoners, being stationed either at Colombo or Galle. *Cey. Obs.*

**Palier Nason.** This little periodical is to be published this year on trial. If it can be made indispensable to our Christian families, it will prove a success and open the way for its improvement and enlargement. We trust that it will receive the loyal support of all the Christians in Jaffna, as well as the help of many outside of the peninsula. Try a copy this year and see how you like it.

# உதயதாரகை.

நீதி இராச்சியத்தாரை உயர்த்தும், பாவமோ எந்த சனங்களுக்கும் இகழ்ச்சி.

கூக ம் புத்தகம்.] யாழ்ப்பாணம், ககூ௦கம் ௵ தை ௴ க௦ உ வியாழக்கிழமை. [சங்கியை, க



## இலங்கைப் புகைக்கப்பற் கொம்பனியாரின



"லேடி கோடன்" "லேடிஅவலக்" கப்பல்கள்பின்வருந்தேதிகளில்மன்னைடதீவிலிருந்துகொழும்புக்குப்போகவிருக்கின்றன

| பாம்பன்வழியாக | | பருத்தித்துறைவழியாக | |
|---|---|---|---|
| கோடன் 1901ம்௵ தை௴ | உ | அலகா தை ௴ | ௳ |
| " " " | 16 | " " | 19 |
| " " " | 30 | " மாசி | 1 |

W M MATHER, & SON. Agents.

## BRILLIANTS.—வைரங்கள்.

இங்கிலிஷ் கமலங்கள், கடுக்கன்சோடிக்கேற்ற சுசீதிமானவைகள், கட்டிய கடுக்கன்கள், சிவப்புக் கடுக்கன், பட்டைச்சிவப்பு, உயர்ந்த புஷபராகங்கள், வேண்டுவோர் யாழ்ப்பாணம் நாவலர்வீட்டில் வாட் அன்டேவி மருந்துச்சாலையிலே பெற்றுச்கொள்ளலாம்.

## புதிய மருந்துகள்

மேகரோகம், மேகவாதம், மேகச்சூடு முதலியவைகளுக்குக் கைகண்ட சஞ்சீவி நன்னாரி ரசாயனம் போத்தல் ரூ. 4. 00

பெண்களுக்குத் தீட்டுக்காலத்தி லுண்டாகும் கர்ப்பவாயுக்குத்துக்குக் கைகண்ட நிச்சயமான கர்ப்பரசாயனம் ரூ. 2. 00

சுரசங்காரி.—இது யாழ்ப்பாணமுழுதும்பேர்போன காய்ச்சல்மருந்து. காய்ச்சலை முறியாது மாற்றும். ரூ. 1. 50

இன்னும் எவ்விதநோய்க்கும் பார்த்து நல்ல மருந்துகள் கொடுக்கப்படும்.

வாட் அன்டேவி.
யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாண வியாபார சமுதாயம்.

1901 ம் வருஷம் தைமாதம் 1 ந் திகதி தொடக்கம் யாழ்ப்பாணத்துக்கும் மட்டைக்கழப்புக்கு மிடையிற் தந்திமூலமாய் அல்லது உண்டியல்மூலமாய்க் காசனுப்பவும் வருவிக்கவும் ஒழுங்குசெய்யப்பட்டிருக்கிறது.

இங்ஙனம்,
WM. MATHER.
Managing Director.

## யாழ்ப்பாண வியாபார சமுதாயம்.

இன்றுதொடக்கம் மேற்சொல்லிய சமுதாயத்தவராற் தகுந்த அடைவின்பேராற் பணங் கடனுக்குக் கொடுக்கப்படும்.

1900 ம் ௵ மார்கழி ௴ 1 ௳.

## அறிவித்தல்.

இதனோடு தொடர்புடையார் சகலருக்கும் இத்தால் அறிவிப்பது.

நான் எனது மாமனர் விஞசித்தம்பி கந்தப்பிள்ளைக்கு (முன் நீராவியடி வண். மேற்கு தற்போது வட்டு மேற்குகுடி) கொடுத்திருந்த அற்றோணித் தத்துவத்தை இன்றையத்திவசத்தில் அழிக்கிறேன். ஆகையால் எனக்காக அவர் கையெழுத்துப்போடும் எந்தப்பற்றுச்சிட்டையாவது மற்றும் எந்தச்சாதனத்தையாவது நான்பெறுமதியானதாக ஏற்றுக்கொள்ளமாட்டேன்.

ச. விசுவனுதன்.
ச. விசுவனுதன்.

கோலாலம்பூர் 15-12-1900.

## விளம்பரம்.

இத்தாற்சகலருமறிவது. மீசாலைகுடி வேதவனம்பாக்கியமாகியநான் சிறுபிராயமாயிருக்கும்பொழுது எனது பிதாவாகிய வீரகத்தியார் வேதவனம் காலஞ்சென்றுபோனமையால், நான் எனது மாதாவின் கீழிருக்கிறேன். என் பிதாவுடன்பிறந்த வேலுப்பிள்ளைபெண் வள்ளியம்மைக்குத் தகுந்த சீதனஉறுதி முடிந்திருப்பதினுல் மிகுதியாயிருக்கும் ஆதனம் எனக்கேயுரியது. இந்த ஆதனத்தை எனக்குச்சேராது தடுக்கும்பொட்டு அதிகம் முதிர்ந்தவரும் மாறுட்டக் குணமுமுடைய எனது பெயரன் வேதவனம் வீரகத்தியாரை அனுப்பிச் சில சாதனங்கள்முடிக்கச் சிலர் யோசித்திருப்பதாகயான் கேள்விப்படுகிறபடியால் எனதுசம்மதியின்றிய ந்தநொத்தாரிசுவாகிலும் யாதொருசாதனமும்முடிக்கக் கூடாதென அறிவிக்கிறேன்.

இப்படிக்கு, வே. பாக்கியம்.

## விளம்பரம்.

இதனால் யாவருமறியவேண்டியது வட்டுக்கோட்டை மேற்குக்குடி நாகனுதர் சிவஞானமாகிய நான் கஅ௯௯ ம் ஆண்டு ஆடிமாதம் கூ ந் திகதி நொத்தாரிஸ் ஆறுமுகம் சிவசிதம்பரப்பிள்ளை முகதாவில் 14227 இலக்கத்தில் வட்டுக்கோட்டைமேற்கிலிருந்து காலஞ்சென்ற எனது மருமகன் செல்லப்பா இராசகாரியர் பெயருக்கு நான் எழுதிக்கொடுத்த நன்கொடைஉறுதியில் சொல்லிய ஆலொல்லை என்கிற காணியைப் பற்றிக் குறித்த இராசகாரியின் உரிமைக்காரர் தத்துவகாரருக்கு யாதொரு சோந்தை உரித்தில்லையென்றும், அவ்வாதனம் எனக்கும் எனது பின்னடியரார்களுக்கும் உரித்தானதென்றும் நான் குறித்தஆதனத்தை என்னுடைய எண்ணப்படி ஈடு ஒற்றி அறுதி முதலிய சாதனங்கள் செய்யலாமென்றும் இத்தாற் சகலருக்கும் வெளியரங்கப்படுத்துகிறேன்.

இப்படிக்கு, நா. சிவஞானம்.

கக00 ௵ மார்கழி ௴ — ௳.

## விளம்பரம்.

வட்டுக்கோட்டைகிளக்கு ஐயம்பிள்ளைகைம்பெண் சின்னத்தங்கமாகிய நான் இத்தாற் சகலருக்குமறிவிப்பது சென்ற மார்கழிமாதம் 20 ந் திகதி வெளிப்பட்ட தாரகையில் சண்டிருப்பாய் திருவிளங்கர் யேக்கப் சின்னத்தம்பு என்பவர் போட்ட விளம்பரம்முழுதும் தவறு. ஏனென்றால் சென்ற ஐப்பசி ௴ 11 ந் ௳ வெளிப்பட்ட தாரகையில் தான் தத்துவத்தால் விலகிவிட்டேனென்று விளம்பரப்படுத்திநீக்கியபின் மறுபடியும் தனக்குத் தத்துவம் இருக்கிறதென்று விளம்பரப்படுத்தல் வியர்த்தமாம்.

யாழ்ப்பாணம் பிரசித்தநொத்தாரிஸ் கனம். தி. ஓ. சங்கரப்பிள்ளை அவர்கள் முகதாவில் 413 ம் இலக்கத்திலும், நவரெலிப்பிரசித்தநொத்தாரிஸ் எற்றுவின் சில்மன் முகதாவில் 167 ம் இலக்கத்திலும், நானும் எனது பிள்ளைகளும்இவருக்கெழுதிக்கொடுத்த தத்துவத்தை பிள்ளைகள் இருவருடையசம்மதியுடன் அழித்துப்போட்டேனென்று நாங்கள் கொடுத்த தத்துவத்தினுல் இவர் அறவிட்ட பணங்களும் [illegible] காணிகளின்உறுதிகளும் தத்துவஉறுதியுந்தந்து [illegible] வருடைய பற்றுச்சிட்டும்பெற்றுக்கொள்ள [illegible] தயல்லாமல் தத்துவத்தில் இவருக்கு உரித்தில்லையென்றும் எங்கள்கொடுக்கல்வாங்கற்காரர் இவரவசத்திற்கொடுக்கல்வாங்கல்செய்யப்படாதென்றும் இத்தால் யாவருக்கும் வெளியரங்கப்படுத்துகிறேன்.

இப்படிக்கு, ஐயம்பிள்ளை கைம்பெண்
சின்னத்தங்கம்.

1901 ௵ தை ௴ 2௳.

## விளம்பரம்.

இத்தாற் சகலருமறிக: சென்ற ஐப்பசிமாதம் கக ந் திகதி வெளிப்பட்ட தாரகையில் நான் எழுதிய விளம்பரம், கனம்தங்கிய ஐயம்பிள்ளை மூத்ததயாபிள்ளையின் சம்மதிப்படியும், தலைமை ஓவசியர் ஐ. இராசகாரியர் எழுதியகடிதங்களின்படியும், இவர்கள்உத்தரவோடு நான் கட்டிடத்தில் செலவிட்ட மிகுதிப்பணத்தை கொடுக்கச்சம்மதித்ததின்படியும் அக்கடிதங்களை வாசித்து எனக்குக்கொடுத்த சின்னத்தங்கத்தின் கேள்விப்படியும் அதைச் சங்கானை உபதேசியார்முன்னும் ஒத்தபடியும் அவவின் நியாயமான பற்றுச்சிட்டின்படியும் நான் கொழும்புக்குப் புறப்படவேண்டிய தருணமதாகையால் அங்கிருக்கும்போது நான் சட்டுவித்த வீட்டுக் குறைவேலைகளையும், மற்றுங்காரியங்களையும்அவர்கள்பார்ப்பதற்கேஅத்தால் தத்துவத்தை நீக்கினேன்.

இவ்வுண்மைக்குமாறாய்சின்னத்தங்கம்மாத்திரம் தனக்காகவும் குறித்த மற்றிருவரும் எனக்குக் கொடுக்குமதியில்பேசாதிருக்க, எழுத்திலேகொடுத்திருக்க கன்னக்கையொப்பமிட்டு அவர்களுக்காகவும் எழுதியபடியாலும் நான்இப்போ கொழும்பிலிருந்துவந்திருக்கிறபடியாலும், நான் வெளிப்படுத்திய அழித்தலை நியாயப்பிரமாணப்படி பெலப்பிக்கமுன் சின்னத்தங்கம் தப்பென்றபடியாலும் அத்தை இத்தாலழிக்கலாமானபடியால் அழிக்கிறேனென்றும், இன்றுதொடக்கம் அவரவர் கொடுக்கல்வாங்கல்களைக் கொடுத்துவாங்கி அவரவாக எனக்குக்கொடுத்ததத்துவத்தை இத்தாலன்றி நியாயப்பிரமாணப்படி அவரவர் உறுதியாலழித்து அதை எனக்கறிவிக்கும்வரைக்கும் நான் அவரவரின் தத்துவத்தைகொண்டுநடாத்த நியாயப்பிரமாணப்படி அத்தத்துவந்தத்துவமாயிருக்கிறதென்றும் இத்தால் வெளியரங்கப்படுத்துகிறேன். சின்னத்தங்கமே! எனது அழித்தல்வெளிப்பட்டு கால்வருஷத்தின்பின் தோற்றியதேயிப்போ நான் வந்து கேள் நீர் என வினவி உனைத் தரிசித்து உனதுமத்தியிலிருந்தும் ஒருமாதயாயிற்றே. எனதொப்பன்றேல் வழக்குத்தொடர். உனதுமாறுபாட்டை உன் மக்களுக்கறிவித்திருக்கிறேன் என்றும் கனம். இராசகாரியர் பரிகரிக்கவருவதாய் அறிவித்திருக்கிறுரென்றும் அறிக.

இங்ஙனம், தி. யா. சின்னத்தம்பு.
தத்துவகாரன்.

சண்டிருப்பாய், உ-௧-௧௯0௧.


## உதயதாரகை

ககூ0கம் ௵ தை ௴ க0 ந் ௳

### பழைய புதிய வருடங்கள்.
### The Old and the New Year.

சென்ற அறுபதுவருடங்களாய் நம் பத்திரிகையானது யாதோரிடையூறின்றி நடைபெற்ற அறுபத்தோராம்பிராயத்தை யடையச்செய்த எம் கிருபாமூர்த்திக்கு முதலாவதாய் ஸதோத்திரஞ்செலுத்தி, இரண்டாவதாய் நம் பத்திராபிமானிகள் நல்லுபகாரிகள் யாவர்க்கும் நன்றிகூறி கத்தார்ச் சந்தோஷத்தோடு புதுவருட சுபசோபன வந்தனஞ் செலுத்துகின்றோம். ஓராண்டைத்தாண்டிப் பின்னோராண்டிற் கால்வைக்கும் நாம், கடந்து செல்லும் வருடத்தைத் திரும்பிப்பார்த்து அதின் விசேடங்களை ஒர்முறை பிண்டித்துநோக்குவது தகுதியாயிருக்கும்.

1900 ம் ஆண்டு உதயமானபோது அங்கிலோராச்சியமானது யாரும் பரிதாபங்கொள்ளத்தக்க நிலையிலிருந்தது. தென்ஆபிரிக்க யுத்தத்தில், ஆயிரக்கணக்கான அங்கிலேயருஞ் சேனைகளும், லேடிசிமித், கிம்பளி, மாபெக்கிங் என்னும் பட்டினங்களில் போவர்களால்முற்றிக்கையிடப்பட்டு வெளிவரவியலாதிருக்க, அவர்களை மீட்கும்படி சென்றசேனைகள், தூகெலாநதி, ஸபியன்கோப், ஸ்றோம்பேக், மகரிஸபொன்றீன் ஆகியாமிடங்களிற் போவர்களால் முறிய அடிக்கப்பட்டுப் பெருஞ்சேதங்களையடைய, மேல் ஆபிரிக்காவிலே அஷந்திநாட்டிலே தேசாதிபதி கொப்சனுக்கும் அவரைச்சேர்ந்தோருக்குமெதிராய் அந்நாட்டார் எழும்பி வளைந்துகொள்ள, இந்தியாவிலே பஞ்சமுங் கொள்ளைநோயும் லட்சக்கணக்கானோரை வாரியெடுக்குமாயத்தத்தோடிருந்தன; ஆனல் வருடம் முடிவாகிறதற்கிடையில் லோட் றப்பேட்ஸ, லோட் கிச்செனராதியோர் போவர்களைப் பின்காட்டச்செய்து அவர்களிற் பதினையாயிரத்துக்கு மேற்பட்டோரைச்சிறைப்பிடித்து ஒறேஞ்சுநாடு திரான்ஸ்வால் என்பவைகளை அங்கிலோராச்சியத்தோடிணைத்துவிட்டனர். ஜெனறல் உவில்கொக்சின்கீழான அங்கிலோசேனை மேல்ஆபிரிக்கசலகத்தை அடக்கிக் காரியங்களை யொழுங்காக்கிவிட்டது. இந்தியாவிற் பஞ்சதன்வாயிலிருந்தோர் உலகம் முழுவதிலுமிருந்து அனுப்பப்பட்ட பஞ்சசகாயப்பணத்தால் பிழைத்தும் மீட்கப்பட, போதிய மழைபெய்தமையாற் பஞ்சம் நீங்கிவிட, கொள்ளைநோயும் படிப்படியாய்க் குறைந்துவிட்டது. சீனவையிட்டு ஐரோப்பியதத்துவ அரசினர்க்கிடையிலோர் பெருமயுத்தங் கிளம்புமோவெனப் பலரும் பயப்பாடடைந்திருந்தும், அப்படியான பிரிவினையின்றித் தத்துவ அரசினர் ஒருமனப்பட்டோராய்ப் பீக்கின் பட்டினத்தில் அடைபட்டிருந்த அங்கிலேயரை மீட்டு, சீனவிலே கிறீஸ்தவர்களும் மிஷனரிமாரும் மற்றும் ஐரோப்பியரும் மோசமின்றியுலாவுதற்கானவொழுங்குகளை யேற்படுத்துகின்றனர். தென்ஆபிரிகயுத்தத்தில் அனேகர் மடிந்ததும், இந்தியாவிற் பஞ்சத்தினுலுங் கொள்ளைநோயினுலும் பலர் மாண்டதும், சீனவிற் பல மிஷனரிமாரும் கிறீஸதவர்களும் அதி கொடுமையாய்க் கொல்லப்பட்டதும், இவ்வாண்டின் விசேஷ துக்கசம்பவங்களாம். கீழ்ஆபிரிக்காவிலே யுகந்தாநாட்டிற் கலகமெழும்பி அமர்த்தப்பட்டதும், சொமாலிலாண்டிற் புதிதாய்க் கலகமெழும்பியிருப்பதும் பிலிப்பைன்தீவு இன்னும் அமரிக்கரால் அடக்கப்படாதிருப்பதும், மெஸ். குறுகர் ஐரோப்பியஅரசினரை உதவிகேட்டு ஏமாந்துபோனதும், பாரிஸநகரத்திலே சர்வதேசநூதனபொருட்காட்சி நடைபெற்றதும், வெவ்வேறாயிருந்த அவுஸதிரேலியநாடுகள் ஒன்றாயிணைக்கப்பட்டு ஐக்கிய அரசாட்சி ஸதாபகமாயதும், அதைப் பிரசித்தஞ்செய்வதற்கு அங்கிலோ ராச்சிய பட்டப் புத்திரரான டியூக் அவ்யோக் பாரிசமேதராய்ச் செல்வதும், அங்கிலோபாளிமேந்தின் பிரதிநிதிகள்சபை புதிதாய்த் தெரிவுசெய்யப்பட, பூர்வகட்சியினரான லோட் சலிஸபுரி மறுபடியும் மந்திரத்தலைவரானதும், மெஸ. மெக்கின்லி இரண்டாம்முறையும் பிரசாதிபதியாய்த் தெரிவுசெய்யப்பட்டதும், மாக்ஸமுல்லர், லோட் றசெல் ஆகியோர் காலஞ்சென்றதும், இத்தாலியகிரீடாதிபதி கம்போல்ற் அரசர் சதிகாரராற் கொல்லப்பட்டதும், உவேல்ஸ இளவரசர், பிரசாதிபதிமெக்கின்லி, பார்சிய அரசரென்பவர்கள் சதிகாரரின் சர்ப்பனையிலிருந்து தப்பியதும், இவ்வாண்டிற் கரிய மற்றும் பிறதேசப்புதினங்களாம்.

இலங்காதீபத்தையுற்றநோக்குமிடத்து தென்ஆபிரிக்கயுத்தத்திற்காய் இலங்கையிலிருந்த அங்கிலோபட்டாளஞ்செல்ல, இந்தியசிப்பாய்ப் பட்டாளமொன்று இங்கே வைக்கப்பட்டதும், இலங்கையிலிருந்து தாமாய் வெளிப்பட்ட 125 பேர் சேர்ந்த ஓர்பட்டாளம் தென்ஆபிரிக்கயுத்தத்திற்குச் சென்றதும், சீர்ப்பாய்ச்சல்வேலை மெஸ உவாட்டின்கீழாய்ப் பிரத்தியேகமானவோர் வேலைப்பகுதியாக்கப்பட்டதும், போவர்மறியற்காரர் இலங்கைக்கனுப்பப்பட்டதும், மெஸசேவஷ அபயசேகர, லூஸ, பிக், அப்துல் றகிமான் என்பவர்கள் முறையே சிங்களர், பேகர், வர்த்தகர் மகமதியரின் புதிய பிரதிநிதிகளாய் நியமிக்கப்பட்டதும், சுப்பிரீங்கோட்டுநீதிபதி மெஸ. உவிதேஷ இளைப்பாற மெஸ.

மொன்றிரீவ் நியமனமாயதும், மெஸ. அருணசலம் குடிதிப்புக் கம்மிஷனராக மெஸ கொற்றன் றிஜிஸரூர்ஜெனரலானதும், இவ்வருட விசேஷசம்பவங்கள் எனலாம்.

நம்மிருப்பிடமாகிய யாழ்ப்பாணத்தை நோக்குமிடத்து புகைவீதிவேலை துரிதமாய்நடைபெற்றதும், பம்பாய்கார்ட்டினரான மெஸ நூர்பாயின்கப்பல் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையிலோடுவதும், அது பொறுத்திருந்தமையாற் பாம்பன்வாய்க்கால் சிலகாலமடைபட்டிருந்ததும், ஆபத்துக்குதவி வைத்தியசாலை பழயபடி சுதேசகாரியஸதரால் நடத்தப்படும்படி விடப்பட்டதும், அதன் இரு வைத்தியர்களிலொருவர் விடப்பட வடமாகாணச் சிரேட்டவைத்தியர் மேற்பார்வைக்காரராய் நியமிக்கப்பட்டதும், "திராவிடகோகிலம்" என்னும் புதியபத்திரிகையொன்றுதோற்றியதும், யாழ்ப்பாணபிறதேசமிஷன்சங்கத்தார் மெஸ. கிங்ஸ் [illegible] தம்பிலையத் தொண்டிப்பகுதிக்கு மிஷன [illegible] யதும், மனேச்சர்மார்களுக்கிடையில் வி[illegible]மானறுற்பவித்ததும், டக்தர் மறேஸ சிரேட்[illegible]ராயும், டக்தர் ஆழமுகம் ஆபத்துக்குதவி வைத்தியசாலை வைத்தியராயும நியமனம்பெற்றதும, மெஸ உவில்மற் ஸீவிற்செல்வ மெஸ. சாண்டேஷ டிஸதிறிக் நீதிபதியானதும், மெஸ. ஐவேஷ ஸீவிற்செல்வ மெஸ கோயிஸ சிலகாலம் ஏசண்டராய்வேலைபார்த்ததும், கனம கோக்ற்றன்ஐயர் ஊர்செல்ல, அவருடைய இடத்துக்குக் கனம் டிக்சன் ஐயர் மிஷனரியாய் அனுப்பப்பட்டதும், கனம் சாமுவேல் நயில்ஸ, மணியம் இரகுநாதமுதலியார், அப்புக்காத்து அளகைக்கோன், டக்தர் போல், பிறக்தர் காப்பென்றர், மெஸ ஆதர் எட்வேட்ஸ. மெஸ்: முருகேசபிள்ளை ஆம்ஸ்ரோங், கல்லக் முதலியாராதியோர் காலஞ்சென்றதும் இவ்வருட விசேஷசம்பவங்களாம்.

இவ்வகையாய்ப் பழயவருடமாகிய 1900 ம் ஆண்டோடு 19 ம் நூற்றாண்டும் கழிந்துபோக, 1901 ம ஆண்டோடு புதியதாகிய 20 ம் நூற்றாண்டும் ஆரம்பமாகின்றது. செல்வேனாண்மைச்செழிப்போடு புகைவீதிவேலை, நீர்ப்பாய்ச்சல்வேலைகளு ம துரிதமாய்நடைபெறுகின்றமையால் புதியநூற்றாண்டு இலங்கையிலே சுபமங்களத்தோடுதுவங்குகின்றதெனலாம். ஐரோப்பிய தானுள அரசினர் ஒற்றுமைப்பட்டிருக்க, யுத்தங்கள் தொல்லைநோய்கள் பஞ்சங்களுந் தணிந்துவிட்டமையால் மற்றுந் தேசங்களுக்கும் புதியநூற்றாண்டு சமாதானசந்தோஷ அறிகுறியோடு துவங்குகின்றதெனக்கூறவைப்படுகின்றோம்.

## தென்ஆபிரிக்க யுத்தம்.
South African War.

லோட் றப்பேட்ஸ இந்தமாதம் [illegible] சேர்ந்து உவைத்திவிற்றங்கி அதற்குமுன்ன [illegible] போன் அரமனையில் [illegible] விக்தோரியா இராணிநாயகியாரைச்சந்தித்து விருந்தருந்தினர் இராணியின்புத்திரர் டியூக்அவ் கொன்னோற்றம் புத்திரி பிறின்செஸ் வீயற்றிசும் கரைக்குச்சென்று லோட் றப்பேட்டை ஒஸ்போர்ணமாளிகைக்கு அழைத்துச்சென்றனர். பாரன் என்றுயர்பட்டத்தோடிருந்த லோட் றப்பேட்சுக்கிப்போது ஏர்ள் என்னும் பட்டங்கொடுக்கப்பட்டிருக்கின்றது. உவைந்தவைவிட்டுப்புறப்பட்டுச் சவுதாம்றன் துறைமுகத்திலிறங்கி உவேல்ஸ் இளவரசராதியோரால் அதிகண்ணியமாயுபசரிக்கப்பெற்று விருந்தருந்திப் பின் லண்டன்பட்டினஞ்சென்று சென்ற்போல்ஸ்ஆலயத்திற் ஸ்தோத்திரஆராதனைசெய்து பற்பலவிருந்துகளாலுபசரிக்கப்பட்டு 5 ந் திகதிஅங்கிலோராச்சிய இராணுவ அதிபதியாய்க் கடமைகள்பார்க்கத்துவங்கியிருக்கின்றனர்,

லோட் றப்பேட்ஸ் தென்ஆபிரிக்காவைவிட்டுப் புறப்பட்டபின் போவர்கள் அக்கிரமத்தியாய்க் கலகங்கள் செய்கின்றனர் திரான்வாலிலே சென்றமாதம் 15 ந்திகதி டிலாறி டேவேஷ என்னும் சேனாபதிகளின கீழாய் 3000 போவர்கள நயிற்டெக்ற் என்னுமிடத்திற் ஜெனறல் கிளேமென்சின்கீழாயிருந்த அங்கிலோ சேனையைச்சூழ்ந்து கடும்பூசல்நடத்தியபோது அங்கிலேயரில் 5 உத்தியோகஸ்தரும் 9 வீரருங்கொல்லப்பட 6 உத்தியோகஸ்தரும் 45 வீரருங் காயப்பட, 18 உத்தியோகஸ்தரும் 555 வீரருஞ்சிறைபிடிக்கப்பட்டனர், ஒறேஞ்சுநாட்டிலே தாபஞ்சுபட்டினத்தாக்கணித்தாய் ஜெனறல் நொக்ஸ் ஆதியோரின்கீழான அங்கிலோசேனைகள் டிவெற்றையுஞ் சேனையையும் வளைந்துநெருங்கியசமயத்தில் டிவெற் ஒரேநோத்தில் மூன்றிடங்களிற் சண்டைநடக்கச்செய்து முன்னிருமுறைகளிற்போல இம்முறையுந் தமதுசேனைகளோடுவெளிப்பட்டுத் தப்பிவிட்டனர். ஒறேஞ்சுநாட்டின் வடகிழக்குப்பாகத்தில் இப்பொழுதும் அங்கிலோசேனைகள் டிவெற்றைத் தொடர்ந்துகொண்டேநிற்கின்றன.

## யாழ்ப்பாணம்

காலநிலை. - Weather —தற்ப நோய்களேயன்றிச் சென்றவருடங்களிற்போல இவ்வருடத்திலே காட்டுக்காய்ச்சலாதியநோய்கள் பரம்பாதிருக்கக்காண்பது சந்தோஷம். இடைக்கிடை இரவிற் பனியதிகமாயிருக்கின்றது.

தேகவியோகம். — Weather.—சென்னை ராசாங்க உத்தியோகத்திலிருந்திளைப்பாறி உபகாரச்சம்பளம் பெற்றுக்கொண்டு உடுவிலிலே வசித்தவராகிய மெஸ. முருகேசபிள்ளை ஆம்ஸ்ரோங் சென்றமாதம் 21 ந் திகதி காத்திராப்பிரகாரங் காலஞ்சென்றுபோனது மின்னுமல் முழங்காமலிடியிடித்தாற்போலாயிற்று. இவர் பழய வட்டுநகர் சாஸதிரசாலையிற் கல்விகற்று சென்னைமாநகரிலுள்ள இராசாங்கபோதனாசாலையிலாசிரியராகிப் பின் பள்ளிக்கூடங்களின் வித்தியாதரிசியாய் வேலைபார்த்தனர். 25 வருட வேலையின்பின் உபகாரச்சம்பளத்தோடிளைப்பாறித் தம் ஜெனனஊராகிய யாழ்ப்பாணம்வந்து உடுவிலிலே அமைதியான சீவியம்நடத்தினர். இவர் இளம்பராயந்தொட்டுக் கிறிஸ்துமார்க்க உண்மையைப்பற்றிய நிச்சயமுடையவராயிருந்தும் நாலைந்துவருடங்களின்முன்னரே தமதுவிசுவாசத்தைப் பகிரங்கமாய் அறிக்கைசெய்து உடுவிற்றிருச்சபையோடுசேர்ந்தனர். பாளயங்கோட்டை, திண்ணைவேலியென்னுமிடங்களே இவரின்நெடுங்காலவேலைஸதானங்களானமையின் அவ்விடங்களிலுள்ளவரால் நன்குமதிக்கப்பட்டு அனேகரின்சினேகிதருமாயிருந்தனர். இவர் உடுவில்வாசராகிய காலஞ்சென்றமெஸ டைற்றின்புத்திரியை விவாகஞ்செய்து சந்தோஷசீவியம் நடத்தினர். எல்லோர்க்கும் இனியநடையினர். இவரது மகிழ்வும் புன்சிரிப்புமான சம்பாஷணை எவரும் மறக்கக்கூடியதன்று. இவரது மூத்த சகோதரராகிய கனம் சாம்பியன், கனம் ஹைஸ போதகர்மார் சுண்டிக்குளி வட்டுக்கோட்டையென்னுமிடங்களிலுள்ள திருச்சபைகளின் தலைவர்களாய் விளங்குகின்றனர். சடுதியாயுண்டான இரத்தாசயநோயே 62 ம் பராயத்தில் இவருடைய மரணத்துக்குக்காரணமாயிற்று. இவரின் மரணத்தாற்றுயருறும் பாரியாருடனும் சகோதரர் மற்றுஞ் சுற்றமித்திரருடனும் நாமுமனுதாபப்படுகின்றோம்.

உபகாரச்சம்பளத்தோடு சென்னைமாநகரில்வாசம்பண்ணினவராகிய ராவுபகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை. வீ. ஏ. வீ. எல். அவர்களுங் காலஞ்சென்றனரெனச் சென்றகிழமைவந்த தந்திகூறிற்று. இவர் வட்டுநகர்ச் சாஸதிரசாலையிற் கல்விகற்று முடித்துச் சென்னையரசாட்சியில் வேலையாகி 25 வருடங்களுக்குமேற்பட வேலைபார்த்தபின் உபகாரச்சம்பளத்தோடிளைப்பாறினர். 1854 ம் ஆண்டு சென்னைச்சர்வகலாசாலையுற்பத்தியானபோது முதன்முதல் வீ. ஏ. பட்டம்பெற்றோர் இவரும் காலஞ்சென்றுபோன மெஸ கறல் விசுவநாதபிள்ளையுமே. இவர் புதுக்கோட்டை நீதிபதியாயுஞ் சிலகாலம்வேலைபார்த்தவர். உத்தியோகத்தாலிளைப்பாறியும் இவர் தமது பிற்சீவியநாட்களையெல்லாம் சென்னைச் சர்வகலாசாலைத் தமிழ்ப் பரீட்சகர் சிரேட்டராய் விளங்கி, தமது சுகத்தையும் பொருளையும் பாராட்டாது தமிழ்நாடெங்குந்திரிந்து ஏடுகளிலே காலாந்தரத்தில் நுழைந்த பிழைகளாற் பல்வேறுவகைப்பட்டுச் சிதலாதியவற்றுக்கிரையாய்க்கிடந்த அரிய தமிழ்க்கிரந்தங்கள் சிலவற்றைப் பலபிரதிருபங்களைக்கொண்டு பரிசோதித்து [illegible] பதிப்பித்தமையாற் தமிழ்மாதின் அலங்கார [illegible] த் தமிழ்ப் பாஷைக்கு [illegible] ஒருபோதும் [illegible] செய்தனர். சிதலாதியவற்றின் வாயிலிருந்து [illegible] பதிப்பித்த தொல்காப்பியம், இலக்கணவிளக்கம், வீரசோழியம், சூளாமணி, கலித்தொகையாதியன இவரைத் தமிழ்மாணவர்க்கென்றும் நினைப்பூட்டுவனவாயிருக்கின்றன இவற்றின் பதிப்புரைகளிலே இவர் காட்டியிருக்கும் காலநிருபணக் குறிப்புரைகள் தமிழ்வித்துவான்களைத்தமிழ்நூற்சரிதஆராய்ச்சியிற்றினைப்பிவிட்டன. தமிழ்ப்பாஷையிலிவர்காட்டிய கரிசனையினாலே தமிழ்நாடெங்கும் அதிபிரச்சியாதியோடு அறியப்பட்டுத் தமிழ்வித்துவான்களின் சினேகிதராயினர். இவரின் மரணத்தில் தமிழ்ப்பாஷைபேசும்யாவரும் கவலையுறுவாரென்பதில் மயக்கமில்லை. இவரது மூத்தினதாரத்து ஏகபுத்திரர் கனம். அழகசுந்தரம்பிள்ளை பசுமலைக்கல்லூரிப்போதகராய் விளங்குகின்றனர். இவரது தம்பிமாரில் மெஸ. அ. சின்னப்பி யாழ்ப்பாணக்கல்லூரி ஆசிரியராயும், மெஸ். சின்னப்பாபிள்ளை தென்இந்திய அரசாட்சிவேலையிலும், மெஸ். இளையதம்பிப்பிள்ளை றங்கூன் அரசாட்சி வேலையிலும், அமர்ந்திருக்கின்றனர். இவரதுபிரிவிற் கவலையுறும் யாவரோடும் எம் அனுதாபமுமிருக்கின்றது.

சுண்டிக்குளிச் சபைத்தலைவராகிய கனம். சாம்பியன்போதகரின் அரிய பாரியாரும் 63 ம் பராயத்திற் கர்த்தருக்குள் நித்திரையாயினர். இவ ஓர் பாரித்த கிறிஸ்தகுடும்பத்தலைவியாகிப் பல புத்திரபௌத்திரிகளின் அரிய வழிகாட்டியாய் விளங்கினர்.

சற்கோவளப்பகுதியிற் சுவிசேஷவேலையிலமர்ந்திருக்கும் மெஸ் ஜே. ரீ. வீரவாகுவின் அரியதுணைவியாரும் சென்றமாதம் 15 ந் திகதி இரவு காலஞ்சென்றனரென்னுந் துயரசங்கதி கேள்விப்பட்டோம். கர்த்தருக்குள் நித்திரையடைவோர் பாக்கியவான்கள்.

உடுவிற்பெண்பாடசாலைத்தலைமை ஆசிரியர் மெஸ் எஸ். லேமனின் நேசமினைவியும் சென்றஞாயிறுக்கிழமை இராக்காத்திராப்பிரகாரங் காலஞ்சென்றனரென்னுந்துக்கசங்கதிகேள்விப்பட்டோம். நமக்கும் அதுவழியே என்பதை நினைத்து மனதை ஆறுதற்படுத்துவது புத்தியாகும். இவவின்பிரிவினாற்றுயருறும அரியநாயகரோடும் சிறுபிள்ளைகளோடும் நாமுமனுதாபப்படுகின்றோம்.

மைசூர்மந்திரியார். — Dewan of Mysore. —மைசூர் ராச்சிய மந்திரியாராகிய சேர் சேஷாத்திரி ஐயர் அவர்கள் மூன் குறித்தபடியே சென்றமாதம் 24 ந திகதி யாழ்ப்பாணத்திலிறங்கி உதவிஏசண்டர் மெஸ். காபேறியால் கோட்டைக்குள்ளிருக்கும் இராணி மாளிகைக்கழைத்துக்கொண்டுபோகப்பட்டு அங்கே ஒருநாட் தங்கியபின் கிரிமலைசென்று 10 நாட்களாய் அவ்விடந்தரித்து இந்தமாதம் 3 ந் திகதி இராமேசுவரத்துக்குப் பிரயாணமாயினர். இவரோடு கூட இவரது அந்தரங்கவிகிதர் டக்தர் கிருஷ்ணசுவாமி ஐயரும் வேலையாட்கள் நாலுபேருங் கூடவந்துபோகின்றனர். சென்ற 2 ந் திகதி இந்துக்கல்லூரி மண்டபத்திலே திறவங்கூர்மகாராசாவாயிருந்து உத்தியோகத்தாலிளைப்பாறும் மெஸ். செல்லப்பாபிள்ளையவர்கள் அக்கிராசனபதியாயிருக்க, இவர்க்கு வந்தனோபசாரசம்மானஞ்செய்யப்பட்டது. மைசூர் இராச பட்டப்புத்திரர் இளைஞராயிருக்கின்றமையால் தாயார் ஆளுகைப்பிரதிஅதிபதியாயிருக்க, சேர் சேஷாத்திரிஐயரவர்களே ஆளுகைப்பொறுப்புமுழுவதையும் ஏற்றிருக்கின்றனர். இவரது வருடாந்தச்சம்பளம் 60000 ரூபாய். அங்கிலேயரால் ஆதரவுபெறும் நாடுகளுள் விஸதாரத்தில் மைசூர் இரண்டாவதாயும், மிகச்செழிப்பானதாயுமிருக்கின்றது.

போவர்மறியற்காரர்—Boer Prisoners.—தென் ஆபிரிக்காயுத்தத்திற் கைதிகளான போவர்சேனைஉத்தியோகஸ்தர்களிருவர்பிணையில்விடப்பட்டுயாழ்ப்பாணம்வந்து கோட்டையில்வசிக்கின்றனர். பெறிரு, கோறக் என்பன அவர்களின்நாமம். இப்போதுவற்றப்பட்டுவரும்கைதிகளின் ஒருபகுதியாரை யாழ்ப்பாணத்திலிருத்தவதற்கு அரசாட்சியாரின் நோக்கம் எனவு மோர்கதைபரம்புகின்றது. இப்பொழுதே கோழி, முட்டை, ஆதியசாப்பாட்டுச்சாமான்களுக்கெல்லாம் விலையதிகமாயிருக்கின்றது. போவர்கள்வந்தால் விலைஇன்னுமேறும் அன்றோ?

## கடிதம்.
### கோலாலம்பூர்.

### ஓர் யாழப்பாணி கொலையுண்டதும் பிரேத தகனமும்.

யாழ்ப்பாணம் திணவிக்குறிச்சியைச் சேர்ந்தவராய் இச்சிலங்கூர் அயரதவீதிப்பகுதியில் Guard வேலையாயிருந்த மெஸ. ச. செல்லையா என்ற வாலிபன் நேற்று ஓர் சிங்கள விசரனாற் கொலைசெய்யப்பட்டார். இவ்விசரன் பலமாசங்களாய் பைத்தியகாரர் ஆசுபத்திரியிற் பரிகரிப்படைந்து சுகமுற்றதினால், அரசாட்சியார் செல்லையாவின் உடன்வேலைக்காரனாய் நியமித்துவிட்டார்கள். இற்றைக்குச் சிலவாரங்களுக்குமுன்னே அவன் மறுபடியும் விசர்ஆனதைக் கவனித்து மெஸ் செல்லையாவும் மற்றைய உத்தியோகஸ்தருமாக அரசாட்சியாருக்கு "றிப்போட்" செய்திருந்தார்கள். அரசாட்சியார் கேள்விப்படி டாக்தர் சிங்களவனைப் பரிசோதனைசெய்து உடனே அவனை விசர்ஆசுபத்திரிக்கனுப்பும்படி காகிதங்கொடுத்துவிட்டார். சேவகன் பாலஸ எடுத்துக்கொண்டுபோகும்படி விசாரணையுங்கொண்டு மறுபடியும் றெயில்வழியாய் வேலைஸ்தானத்துக்குவந்தான். பரோபகாரகுணமுள்ள செல்லையா அவ்வேளையிலே சிங்களவனுக்காய்ப் பதில்வேலைசெய்துகொண்டிருந்தார். விசரன் றெயில்விறங்கினவுடனே தன் பொக்கெட்டிலிருந்த பேனாக்கத்தியை யெடுத்துச் செல்லையாவின் நெஞ்சிற் குத்திவிட்டான். உடனே செல்லையா பிரேதமானார். அப்புறம் மற்றவர்களையும் கொல்லும்படி பார்த்தான். ஆனாற் காவற்காரர் அவனைத் தூக்கிப்பிடித்துப்போட்டார்கள். இச்செய்திகோலாலம்பூரைக் கிட்டினவுடனே சிரேஷ்டர்பலர் Traffic Inspector மெஸ. சின்னப்பாபிள்ளை என்பவரைத் தலைமையாய்க்கொண்டு கொலைநடந்தஇடமாகிய குவாலக்கிள்ளானை றெயில்வழியாய்ச்சேர்ந்து கோட்டார் அனுமதிபெற்றுப் பிரேதத்தைக் கோலாலம்பூருக்குக் கொண்டுவந்து "சின்ன யாழ்ப்பாணிகள்" யாவருமாய் ஒருங்குசேர்ந்து தக்க மரியாதையுடன் பிரேதத்தை எடுத்துப்போய் யாழ்ப்பாணிகளுக்கென்று அரசாட்சியார் கொடுத்திருக்கிற மயானஸதலத்திலே இறந்தவரின் சமயாசாரவிதிப்படி பிரேததகனம்செய்தார்கள்.

மயானஸதலத்தை அடைப்பிக்கவும் காபந்துசெய்யவும் ஓர் மலாய்க்காறனை நியமிக்கவேண்டுமென்றும், அவனைத் தாபரிப்பதற்கு எல்லாரும் தங்களாலானபொருளுதவியை மாதவீதம் தவறுதொழுங்காய்ச் செய்யவேண்டுமென்றும், துவிபாஷிதர் (தின்னவேலி) மெஸ. தம்பாபிள்ளை பேசினர், ஓவசியமார் விசுவநாதர், சரவணமுத்து, Dresser சீனிவாசகம், மெஸ. கனகசபாபிள்ளை, தலைமை ஓவசியர் இலட்சமணபிள்ளை இன்ஸ்பெக்தர் (தெல்லிப்பழை) சின்னப்பாபிள்ளை ஆதியோர் அதற்குச் சம்மதிசொன்னார்கள்.

கொலையுண்டவர்க்காய் அனுதபித்துக் கூட நின்ற இனத்தவர்களுக்கு ஆறுதல்சொல்லி 6 மணிபோல் யாவரும் தத்தம் திசைநோக்கினர்,

இங்ஙனம், உரும்பராய் S. A.

K. Lumpur, Dec. 4-1900.

## பரிதாப மரணம்.

இத்தமாதம் 10 ந் திகதி உசான்வாசராகிய மெஸ. சின்னப்புஉடையார் அவர்களுடைய பௌத்திரி அல்லது மெஸ. பெரியதம்பி அவர்களுடைய புத்திரி தன் மாதா முழுகும்படி அதிக சூடாய்க் காய்ச்சிய வெந்நீர் மிடாவைத் திணற்றடிக்குத் தூக்கிக்கொண்டுபோனபொழுது, நேரே ஓடிவந்து அந்த மிடாவில் மோதப்பட்டுக் கீழேவிழ மிடாவும் இரண்டாய்ப் பிரிந்து வெந்நீரும் பிள்ளையை முழுக்காட்டிவிட்டது. உடனே அதின்மாதா கூக்குரலுடன் பிள்ளையைத்தூக்கினபொழுது "அம்மா அழவேண்டாம் எனக்குச் சுடவில்லை" என்றுசொல்லிச் சில மணித்தியாலங்களாற் புழுத்துடித்தாற்போல் துடித்துச் சிவனைவிட்டது. பிள்ளையின் வயசு ௯. ஐயோ தங்கள் உதரக்கனி துடித்தபரிதாபக்காட்சியைக் கண்ணுற்ற பெற்றோருடைய இதயங்கள் என்ன ஸதிதியிலிருக்குமோ? இப்பாலகியின் மரணத்திற் பிரலாபிக்கும் பெற்றோருடனும் பேரனுருடனும் எம் அனுதாபமுமிருக்கிறது.

உசன் D. P. A.

## 1900.

The closing year of the century has been an eventful one. Every year as it comes and goes, brings its surprises and makes its history, and the year 1900 has been no exception to the rule. A year ago no one would have been rash enough to foretell the events that took place in China six months later, yet now they have transpired we only wonder that they were not foretold. China has startled the world with its Boxer uprising, and the end is not yet. In June came the first riots followed by dreadful massacres all over the north of China. Nearly 300 missionaries have lost their lives, and thousands of native Christians. Troops from England, Germany, Russia, France, Italy, Japan and America have been hurried to the scene of disturbance, and after many days Pekin was entered and the foreigners rescued. When the year closed negotiations were going on between the European Powers, America, and Japan on the one side, and the Chinese authorities on the other, and it is expected that a satisfactory agreement will be reached. But China is a strong nation in spite of its apparent apathy, and needs but to be thoroughly aroused to put forth its strength and crush the foreigners on its soil. There is great need of statesmanship in dealing with the Celestial Empire, and we hope no blunder will be committed.

In South Africa the tide turned early in the year, and success has steadily attended the British arms. Cronje and a large force of Boers were captured in March. Ladysmith and Kimberly were relieved soon after, followed in May by the raising of the siege of Mafeking. Lord Roberts has won for himself a name that will ever live in the memories of the English people. Johannesburg and Pretoria were soon occupied and the Transvaal annexed as British territory. The latter months of the year have seen slight reversals, and guerrilla warfare still continues, but the war is practically over. It may be some time, however, before peace is finally restored and the people are able to resume their daily occupations.

In India we have had such a famine as has not been known before in the memory of the oldest inhabitant of that vast empire. Thousands have perished, and though rains have fallen it will be years before all traces of this sore affliction will have disappeared. God's hand has been heavy upon India the past few years and she will do well to take heed to the warnings. Considerable over Rs. 12000 was raised in our province alone for the relief of the famine stricken, and Ceylon sent a much larger sum. Shiploads of grain and large sums of money have attested to the deep sympathy felt for the suffering, by Christian England and America, while even the nations of Europe have contributed to the relief of the famine.

Minor disasters have occurred in other parts of the world. A great fire in one of Canada's principal cities, and a cyclone and tidal wave in Texas U. S. A., destroyed hundreds of lives, and wrecked property to the amount of hundreds of thousand pounds sterling. The assassination of King Humbert of Italy, one of the best rulers that Italy has had in modern times, was a dastardly act which horrified the civilized world. America and England have had important elections, and in both countries the government was sustained and an era of prosperity assured to these two great Christian nations. This in brief is the history of the world for the year just closed.

Turning to our own island we note but few events worthy to be chronicled. Two earthquakes have visited Ceylon during the year one in February and one in September, both very slight and doing no damage. Early in the year a Ceylon Contingent of Mounted Infantry was formed and sent to South Africa. In May an encampment was started at Diyatalawa and in August the first instalment of Boer prisoners of war arrived in the island followed by several others until we have now over 4000 prisoners in our midst. The Northern railway has made substantial progress and materials sufficient for the construction of the road from Kangesanturai to Elephant Pass have been landed. The untimely death of the chief engineer, Mr. White by snake bite cast a gloom over the whole community. A new line of steamers plying between Colombo and South India and Jaffna was started early in the year, but has not had very great success.

Death has been busy in Jaffna and removed many prominent men among whom we may mention, A. I. Irakunatha Modr. Maniagar of Vallegamam West, Dr. Paul, Advocate Allagakoen Postmaster Arthur Edwards, Mr. Hallock Modr. and Proctor Carpenter.

In mission circles we have welcomed to the work Rev and Mrs. J. Thompson in the Church mission, and Rev. and Mrs. J. H. Dickson in the American mission. Nor must we forget to mention the visit of Miss E. Swift of the Madura mission, in July through whose labors a great impetus was given to the work of the Bible women.

### THE LATE MR. JOSEPH W. ARMSTRONG.

We regret to record the death of Mr Joseph W. Armstrong at Uduvil, Jaffna, on the afternoon of Friday the 21st of December 1900 after a very slight illness. The end came rather suddenly. He was born in Jaffna May 1838, received his education in the American Seminary at Batticotta, Jaffna, and afterwards went to Madras and joined the then Govt. Normal School and after completing his course there, qualified himself as trained teacher. After holding the post of teacher in various Govt. Schools in the Madras Presidency, he was appointed Deputy Inspector of schools, which post he held for close upon 25 years. He retired on pension at the close of the year 1889 and returned to Jaffna to spend the evening of his life in the midst of his large circle of relations. His name is well known and respected even to this day in the Tinnevelly district where he had spent the best part of his active life where the leading lawyers, Govt. Officials, teachers and other men of light and learning at the present time must have passed through his hands as pupils in the schools under his inspection. He was jovial and very social by nature with a heart that wept with those that wept and rejoiced with those that rejoiced. He was generous even to a fault. He was married but leaves behind no offspring. Two of his brothers Rev. Champion and Rev Rice are pastors, the first under the C M. S. Church at Jaffna and the second under the American Mission at Batticotta, Jaffna. One of his nephews Mr. L. C. Williams is now Inspector of schools at Madras. He was a member of the American church at Uduvil and was buried in the New Cemetery at Uduvil. The funeral service was conducted by Rev. S. Eliyatamby, pastor of the Uduvil Church.

He leaves behind a widow and a large circle of relations to bemoan his loss. *Com.*

### THE LATE MRS. G. CHAMPION.

Mary Anne the beloved wife of Revd G. Champion pastor of the C. M. S. St. John's Church Chundicully, died at her residence on the night of the 31st December 1900 at eleven o'clock. She was born on the 8th of January 1832, was educated both in the Uduvil and Nellore Boarding Schools and married Revd. Mr. Champion on the 7th of June 1848. Revd. and Mrs. Champion celebrated their golden wedding on the 7th of June 1898. Mrs Champion was a great helper in the Christian work carried on by her husband and was always found by his side in all the visits that they paid to the sick and the afflicted. Her whole life has been a noble chronicle of charity and Christian self sacrifice. In every part of Jaffna where her husband was pastor, she was loved and esteemed as a mother not only by Christians but also by her Hindu neighbours among whom they lived and worked. It may be truly said of her "Many daughters have done virtuously but thou excellest them all."

It is no doubt sad to think of the separation after nearly 53 years of wedded life, to think that a faithful coworker and help mate who by humble unassuming devotion to the work of the Master had contributed to the usefulness of the church of Christ in Jaffna has passed away from her husband who in his old age is left to do the work single handed. But she now rests in peace with her maker. Two of her sons Mr. S. J. Champion and Mr. P. J. Champion pre-deceased her. The first was a proctor in the District Court of Jaffna. She leaves behind three daughters and one son and a large number of grand-children to bemoan her loss.

The funeral took place on the first of January 1901 at 4 p. m. the service being conducted by Revd. J. Thompson assisted by Revds. Daniel and Morse, and she was buried in St. John's Burial ground at Chundicully.

Chas. Champion

### EIGHT SHORT RULES FOR CHRISTIANS

[The late Dr. Hastings when alive had the following eight short rules for Christians printed and distributed among the Christians.]

1. Never neglect daily private prayer: and when you pray remember that God is present, and that he hears your prayers. Heb. 11. 6

2. Never neglect daily private Bible reading; and when you read remember that God is speaking to you, and that you are to believe and act upon what he says. John 5 39.

3 Keep the sabbath holy. Never fail to attend public worship if possible. If not, keep the day holy at your home by reading the Bible and prayer. Lev. 19: 30. Is. 56: 2. 58: 13. 14.

(Back sliding usually begins with neglect of those three rules.)

4. Never profess to ask God for anything you do not want. Tell him the truth about yourself however bad it makes you; and then ask him for Christ's sake to forgive you what you are, and to make you what you ought to be. John 4: 24.

5. Never let a day pass without trying to do something for Jesus. Every night reflect on what Jesus has done for you and then ask yourself, What have I done to-day for him? Matt. 5: 13-16.

6 If ever you are in doubt as to a thing being right or wrong, go to your room and kneel down and ask God's blessing upon it. Col. 3: 17. If you cannot do this it is wrong. Rom. 14: 23.

7. Never take your Christianity from Christians, or argue that because such and such people do so and so therefore you may. 2 Cor. 10: 12. You are to ask yourself How would Christ act in my place? and strive to follow him. John 10: 27.

8. Never believe what you feel if it contradicts God's Word. Ask yourself, Can what I feel be true if God's Word is true? and if both cannot be true, believe God and make your own heart the liar. Rom, 3: 4. 1 John 5:10,11.

### A CHINESE WEDDING.

AN EXTRACT FROM A LETTER FROM MISS J.H. BROWN.

Foochow, Nov. 29th, 1900.

A few days ago a party of us went out into the country some fifteen miles to attend the wedding of Miss Bement's cook. He had prepared a foreign dinner for us—five courses, no less. Mr. Walker married them. The cook is not a Christian and the girl is a raw heathen, but as Dr. and Miss Bement lent the money to pay for the bride the cook's parents consented to a Christian wedding. The bride had been sitting in the wedding chair nearly all morning without even a crack to breathe through, so before we had dinner we insisted that the ceremony should be performed. The chair was the regulation wedding chair—very heavily decorated with red and gilt and all sorts of embroidered figures. It is very gay indeed but the bride is to be pitied for sometimes she sits in there for hours without any air. The custom is to have the bride led by a neighbor from the chair to the altar amid the beating of drums. But this bride and groom stood upon a red blanket, the attendant holding the bride's hand and answering for her when it came to the "Love, honor and obey" part.

The cook is a general in his way. He had his eye on every thing. Nothing was there that ought not to be there. Consequently he found occasion several times to chase the dog away which persisted in coming to the bridal party to see what was going on. This helped to make the ceremony very *impressive*. A bunch of fire-crackers always ends the ceremony.

At the dinner we had a real wedding cake. The cook had bought it at the Settlement alliced and fixed up in fancy style. The bride of course did not appear at the table so the bridegroom did the act of cutting the cake. After the ceremony we went into the bride's chamber where she sat with her attendant all alone and not in the feast and the company. At this point the groom served tea and dry melon seeds one of their favorite dishes. We tried to enter into conversation with the bride but she was too frightened to answer.

The natives had a real feast after we left. On our way home we met people going to it. Every one was carrying something to give to the newly married pair. On such occasions every one is supposed to pay for his dinner. We each paid a dollar. Others brought ducks, chickens, vegetables, rice etc.

The cook and his wife came back today. We are all interested in Dr and Miss Bement's venture. It is a little risky paying so much money for one of whom you are not quite sure.

[*Note*. In China the man must buy his wife. In Jaffna the woman must buy her husband. G. G. B.]

### WARS AND RUMORS OF WARS.

[We take the following lines written by Margaret Sangster from one of the recent American papers. *Ed. Star.*]

Wars and rumors of wars,
smoke, and riot and flame,
But our God is high in the heavens,
and the Prince of Peace is His Name.

Wars and rumors of wars;
the nations like wolves at bay,
Growling, and prowling, and snarling
till their battles are set in array.

The heathen swarm to the conflict;
they storm with fire and sword,
And hurl their grim defiance,
bitter and brave, at the Lord.

Alas, for the heathen peoples
who know not what they do.
Who must eat the bread of abasement,
and drink of the cup they brew.

Wo for the homes uncounted
where sorrow and squalor meet,
Where the women wait and listen
for unreturning feet.

Gog and Magog are loose;
rapine is in their track;
But the Lord who holds them in leash,
can call their cohorts back.

His saints are safe in the terror,
whatever the stress shall be,
Our Lord for His own is mighty;
they are safe on land and sea.

The great world navies hasten,
the great world armies rise,
But One is serene above them,
the Lord of the earth and skies.

Out of the fury and tempest,
out of the whirl and the rush,
A still small voice shall issue;
there shall follow a brooding hush.

And God shall bring His purpose
to blossom and fruit in time;
His purpose that marches onward
to His hour of grace sublime.

Wars and rumors of wars,
till the Master bid them cease,
For our God is King in the Heavens,
and His Name is the Prince of Peace.

Printed at the Press of Strong and Asbury Manippay
Published by A. C. Mission and Thambyah Strong Cooke